அலைபாடும் இசையோசை கேட்கலையா
கரையில் இளம்வீரர் படும்பாதம் பார்க்கலையா
துணைனிற்க ஒரு கருவி தூக்கலையா
இன்னும் அவர் நெஞ்சின் உணர்வலைகள் தாக்கலையா 2

விழி தூங்க மறந்திங்கு விசப்படகை பார்த்திருந்து
பகைமுடித்த எம்தோழர் சேதியினை தாங்கி வரும்
வழி இதுவென்றே உரைத்த வரலாற்று நாயகரின் 2
வாழ்வதுவின் பாதை தனை அலை எழுந்துகாட்டி நிற்கும்

அலைபாடும் இசையோசை கேட்கலையா
கரையில் இளம்வீரர் படும்பாதம் பார்க்கலையா

ஓடிக்கழித்த பெரும் நீளக்கடல் வெளியை
ஈழ தொடாத எங்கள் தோழர்களின் கதை கூறும்
கூடிக்கழித்த புலி வீரர்களின் நினைவலைகள் 2
கூடல் சுமந்த ஒரு சோக இசை அலைபாடும்

அலைபாடும் இசையோசை கேட்கலையா
கரையில் இளம்வீரர் படும்பாதம் பார்க்கலையா

மச்தத்தை தேடி வலை வீசவெனச் சென்றவர்கள்
இச்சமெதும் இல்லாத வேதனைகள் தாங்கிவரும்
அச்சத்தால் கடலோடி அந்தரிப்போர் துயரமதை 2
அகற்றவென சென்றவரின் சோகங்கள் பாடி வரும்

ஆயிரமாய் அலையெழுந்து ஆட்பரித்து நிதமொலிக்கும்
ஆயிரமாய் புலிவீரம் பாடிஇங்கு கடலடிக்கும்
விடியலதை தேடுகின்ற சேதியினை கொண்டுவரும்
மடிமீது உறங்குகின்ற தோழர்களின் கனவுரைக்கும்

அலைபாடும் இசையோசை கேட்கலையா
கரையில் இளம்வீரர் படும்பாதம் பார்க்கலையா